# ஜனவரி – 01 – திங்கள்

### அன்னை மரியா இறைவனின் தாய் - புதுவருடப் பிறப்பு

### ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக!
(எண் 6:24)

---------------------------------------------------------------

## முதல் வாசகம் : எண்ணாகமம் 6 : 22 – 27

ஆண்டவர் மோசேயிடம் கூறியது நீ ஆரோனிடமும் அவன் புதல்வரிடமும் சொல் நீங்கள் இஸ்ரயேல் மக்களுக்கு ஆசிகூற வேண்டிய முறை. "ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன்மீது அருள் பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!" இவ்வாறே அவர்கள் என் பெயரை இஸ்ரயேல் மக்களிடையே நிலைநாட்டுவர் நானும் அவர்களுக்கு ஆசி வழங்குவேன்.

**பதில்பாடல்:** கடவுளே எம்மீது இரங்கி எமக்கு ஆசி வழங்குவீராக.

## இரண்டாம் வாசகம் : கலாத்தியர் 4 : 4 – 7

சகோதர சகோதரிகளே! ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம்மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார் அந்த ஆவி "அப்பா, தந்தையே", எனக்கூப்பிடுகிறது. ஆகையால் இனி நீங்கள் அடிமை களல்ல பிள்ளைகள் தாம் பிள்ளைகளாகவும் உரிமைப் பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே.

## நற்செய்தி : லூக்கா 2 : 16 - 21

அக்காலத்தில் இடையர்கள் விரைந்து சென்று மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தை யையும் கண்டார்கள். பின்பு அந்தக் குழந்தையைப் பற்றித் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட யாவரும், இடையர்கள் தங்களுக்குச் சொன்னவற்றைக் குறித்து வியப்படைந்தனர். ஆனால் மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இடையர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக் கொண்டே திரும்பிச் சென்றார்கள். அவர்களுக்குச் சொல்லப்பட் டவாறு எல்லாம் நிகழ்ந்திருந்தது. குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டிய எட்டாம் நாள் வந்தது. தாயின் வயிற்றில் உருவாகுமுன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்.

**தியானம்:** அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். புத்தம் புது மலராக நமக்கு புதிய ஆண்டு மலர்ந்திருக்கிறது. கடந்து வந்த ஆண்டிற்கு கண்ணீருடன் விடை கொடுத்து புது ஆண்டை புன்னகைப் பூக்களால் வரவேற்போம். கடந்தவை போகட்டும். இனி நடப்பவை நல்லதாவே இருக்கட்டும்.கடந்த ஆண்டு வசந்தத்தின் காலமாக, மகிழ்ச்சியின் காலமாக, வெற்றியின் காலமாக, கண்ணீரின் காலமாக, இழப்பின் காலமாக ,சோதனையின் காலமாக, வேதனையின் காலமாக நமக்கு அமைந்திருக்கலாம். எல்லாவற்றிலும் இருந்து நம்மை பாதுகாத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். முதல் வாசகத்தில் கூறப்பட்டதுபோல் இறைவன் நம்மை ஆசீர் வதித்து பாதுகாப்பாராக. நம்மை மீட்க நமக்காக பிறந்தவர் யேசு. இன்று அவருக்கு விருத்தசேதனம் செய்து பெயர் சூட்டிய நாள். ஏழை வடிவில் பிறந்தவரின் பிறப்பு ஏழை இடையருக்கு முதலில் அறிவிக்கப் படுகிறது. ஆடுகளை மேய்ப்பவர்கள் இடையர். நம்மை மீட்க ஆயனாக வந்தவரின் பிறப்பு இடையருக்கு அறிவிக்கப்படுவது தகுமே. இடையர் ஒரே இடத்தில் குடி கொள்வதில்லை. அவர்கள் தமது மந்தையை ஊர் ஊராக கூட்டிச் செல்வார்கள். அவர்கள் செல்லும் இடம் எல்லாம் யேசுவின் பிறப்பு அறிவிக்கப் பட்டது. இது மறைக்கப்பட்ட நிகழ்வாக இருக்கவில்லை.எனவே மெசியாவின் பிறப்பு எல்லா மக்களுக்கும் அறிவிக்கப் பட்டது. இதனால் கலங்கியவர்களும் உண்டு, சந்தோ'ப் பட்டவர்களும் உண்டு. அதிகாரம் செய்வோர் கலங்கினர், பாவிகள் ஆனந்தம் கொண்டனர். யேசுவின் பிறப்பு சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இன்றும் நல்லது செய்பவர்களை பகைப்பவர்களும், ஆதரிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். நாமும் கடவுளின் ஆட்டுக்குட்டியை பின்பற்றி வாழ முயற்சி எடுப்போம். இப்புதிய வருடம் எமது வாழ்வில் மாற்றத்தை கொண்டு வரட்டும். இவ்வுலகில் நடைபெறு ம் அனியாய கொலைகள், அடிமைத்தன வாழ்வு, பசி, பட்டினி போன்றவை இல்லாத வருடமாக இவ்வருடம் அமைய வேண்டுவோம். இயற்கை அன்னையின் சீற்றம், அழிவுகள் அற்ற வருடமாக இருக்கட்டும் என்பதே நமது பேரவா. இறைவன் நம்மோடு இருந்து எம்மை பாதுகாத்து வழிநடத்துவாராக!